Koviloor Digital Library
Acc No 46025
Puduvayal

சோமவாரமகிமை.

இது
கண்டனூர்
நா. பெ. நா. மு. முத்துராமய்யா
அவர்களால்
இயற்றப்பெற்றது.

சாக்கைத்தலத்தில் சண்முகக்கடவுட்குச்
சோமவாரஞ் சுகிர்த்தாய்நடத்தும்
புதுவயல்
அடியார்கள் விருப்பத்தின்படி

சிதம்பரம்
ஸ்ரீ குஞ்சிதசரண அச்சியந்திரசாலையில்
பதிப்பிடப்பெற்றது.

1910ஞு நவம்பர்மீ 18உ

46025

Koviloor Digital Library

சிவமயம்.

சோமவாரமகிமை.

விநாயகர் வணக்கம்.

ஒங்குமொருமருப்பானை யுயிர்க்குயிராயிருப்பா
னையுறுந்தொழிற்குத், தீங்கிடர்களில்லாமனினைப்ப
வர்க்குமுடிப்பானைச்சிந்தித்துய்ய, நீங்காமல்வணிக
ரெலாந்தமேத்தப்பெறுவானை நெருங்கவேய்ந்த, பா
ங்கானமடங்களுறுஞ் சாக்கையில்வா ழைங்கரனைப்
பணிதல்செய்வாம்.

கயிலாசவிநாயகர் வணக்கம்.

சதுமுகனும்படைத்தலுத்தான்றருசமனுந்துடை
த்தலுத்தான்சனனந்தோறும், அதுவதுவாய்ப்புகுந்
தலுத்தேன்யான்றனுமிம்மூவரனுப்புந்திர், மதுமலர்
கற்சிரகமார்ந்தார்வேய்ந்த வணிகரெலாம்வாழ்த்துகி
ன்ற, புதுவயனற்கயிலாசவிநாயகன்பொன்னடிக்கம
லம்போற்றிவாழ்வாம்.

Koviloor Digital Library

சுப்பிரமணியர்வணக்கம்.

பாரகத்தும் விசும்பகத்தும் பயில்முனிவரிமைய
வர்தம்பழங்கணீங்கத், தாரகத்தோன்மறையுருவாய்
மருவுசிவசத்திதருஞ்சத்தியால்வெஞ், சூரகத்தைத்
துளைப்படுத்தி யொருதோகையேறி யிருதோகைமா
ரோ, டேரகத்திலிருந்தபிரானென்னகத்திலிருக்கவி
டர்க்கிடமின்றன்றே.

வீரசேகரர்வணக்கம்.

பஞ்சகோசமாமுடலின்பகுப்பையுணரவறியாத,
நெஞ்சமுள்ளேனின்சொரூபநிலைமை யுணரற்கெளி
தாமோ, வெஞ்சவில்லாப்பரமபதமெனக்குநீதந்தரு
ளுதற்குத், தஞ்சமென்றேயுனைப்பணிந்தேன் சாக்
கைவீரசேகரனே.

உமையாம்பிகைவணக்கம்.

ஓதரியபவக்கடலிற்பல்வகைச்சென்மங்கடோறு
முழன்றுபொல்லாக், காதலெனுமலையறையக்கன்ம
மெனுங்காற்றடிக்கக்கலங்கிநொந்தேன், வேதமுடிவி
னில்விளங்கும்வீரசேகரரிடமேமேவிவாழுஞ், சீதமிகு
மருளுடையதேவியுமையாண்டவளேதெய்வமாதே.

Koviloor Digital Library

திருக்குடையமனமதனாலெழுவகையவுருவெடுத்துச் செகத்தின்மீதே, கருக்கிடையேயமிகச் சுழன்று மலைந்தலைந்துங்கதியுறவுகாணாதாலுன், னருட்கடலிற்குளிப்பாட்டி யமுதளித்துன்பாதமலராருளிற்சேர்க்கத், திருக்கடைக்கணருள்புரிவாய்தேவியுமையாண்டவளேதெய்வமாதே.

அகவல்.

பூமணிகொழிக்கும்புணரிசூழ்புவியா
மாமகளிருகண்மணியெனவிளங்கும்
கைதவனாட்டிற்கனதனவணிகர்கள்
வைதிகசைவமார்க்கமதுள்ளோர்
வசிக்குமூரில்மங்களதினங்கட்
குசிதமாஞ்சாமானுதவும்புதுவயல்
நகரத்தார்களில்நல்புளவடியார்
செகமெலாம்போற்றுஞ்சிவதருமத்தில்
சோமவாரத்தானமபிடேகஞ்
செயங்கொடுக்குஞ்சிவபணியென்று
துன்பக்குஷ்டஞ்சோழற்கற்பிய
மன்புனிர்த்தமகிமையைக்கொண்ட
சாக்கைத்தலத்திற்றகுவீரசேகரர்

Koviloor Digital Library

பாகத்தமர்ந்தபரையுமையாம்பிகை
குழந்தையானகுகன்றனக்கன்பாய்
பழவகையனேகம்பாலுடன்கொணர்ந்து
சிவபுராணத்திற்செப்பியபடியே
நவந்தருமபிஷேகங்கணடாத்தியும்
நெய்விளக்காதியமமாய்ப்போட்டு
மெய்முழுதுக்கும்விரைமலர்கொணர்ந்து
தார்பலசமைத்துச்சாததியுமன்பாய்க்
கார்த்திகைமாதங்கடவுளுக்குரிய
சோமவாரந்தோறுஞ்சுகித்தாய்
காமியபயனைக்கருதிடாதியற்றி
வருவதாலிவர்களாவழிவழியாகப்
புருடார்த்தநான்கும்பொருந்தவர்மாதோ.

திருவிளையாடல்.

மனிதரிலுயர்ந்தோராதிமறையவர்தேவர்தம்மிற், பனிதருதிங்கள்வேணிப் பகவனேயுயர்ந்தோன்வேட்டோர்க், கினிதருள்விரதந்தம்முளதிகமாயிந்தவாரம், புனிதமந்திரங்கடம்முட்போதனைவரெழுத்துமேலாம்.

Koviloor Digital Library

பிரமோத்தரகாண்டஞ் சோமவாரமகிமை.

சொன்னவிவையெவற்றினுக்குமேலதாகிச்சுருதி
சிவாகமம்புகலுஞ்சோமவார, மன்னிவரும்பிரதோ
டந்தோறுஞ்செம்பொன்மலைச்சிலைவானவனை யுலகங்
களின்ற, கன்னியுடனாகமத்தின்வழிதப்பாதுகடிமல
ரின்வழிபாடுபுரியுமேலோ, ரின்னலெனும்பெருங்க
டலின்கரையின்றேறியிகபரத்தும்போகநுகர்ந்திடுவர
ன்றே.

இல்லறத்தின்கிழமைதனைப் பூணுமாந்தரியல்
புடனில்லறக்கிழமைபூண்டமாந்தர், தொல்லறத்தி
ன்கொழுநருடன்வாழுமாதர் துணைவர்தமை யிழந்து
துயருழக்குமாதர், புல்லறத்தையொருவியரன்சோம
வாரபூசனையேபுரிவரெனிற்புவனமீதி, னல்லறத்த
ன்னவருண்ணினைந்தவெல்லாமவர்நினைவின்படியேவ
ந்தடையுமன்றே.

புரிகுழலணங்கேசோமவாரத்திற்புனிதநீரினிது
டனாடிப், பரிவுடனுணவுமுதலியதுறந்துமோனமா
ய்ப்பவித்திரையாகித், தெரிமலர்கொணர்ந்து பரம
னோடுமையைச்சிவாகமவிதிமுறைவழுவா, தரியபூச
னைசெய்தருமறையவர்க்குமுவப்புடனன்னமுமளித்
தே.

Koviloor Digital Library

சந்தமுமலருமரிசனத்துடனேசாத்தினால்வளம் பலதழைக்கும், நந்தலிற்றாபமளித்திடினுடலநறுங் கடிகமழுமதல்லா; லங்கமிற்பமளிக்கினேருளவாயளி யளித்திடினுணவுளதாம், பைந்தொடிபாகுவெள்ளி லையளிக்கிற்பதுமமாளிகைமயில்சேரும்.

சோமவாரகற்பம்.

உமையுடனேயொன்றியுறுஞ்சிவன்பேர்சோம
னுமைமசிவன்வாரம்மதுவென்றோர். (௧)

எக்கடவுளோர்களினுமேற்றமிகுஞ்சோமசுந்த
ரக்கடவுளுக்குரித்திஃதாம். (௨)

ஆய்ந்தபிங்கிவ்வாரவிரதமனுட்டிக்க
மாய்ந்துவிடப்பாசவலி. (௩)

கன்னுதன்முன்கார்த்திகைமுற்சோமவாரந்தன்
பன்னுகசங்கற்பனை. ⌊னிற்

மற்றுமுளமாதமுதற்சோமவாரந்தன்னிற்
பற்றுகசங்கற்பனை. (௫)

ஆண்டொன்றிரண்டாதியாறிரண்டல்லாலென்று
மீண்டியற்றுவாம்விரதமென்று. (௬)

Koviloor Digital Library

என்றுன்குறப்பும்வயதென்னிரண்டுமுற
வெண்ணிச்சதாசிவருக்கே. (எ)
ஆட்டுகவாணர்க்குமயிர்தனிதமோரைந்து
மாட்டுகபான்முப்பழமுமார்ந்து. (அ)
ஆட்டுகபின்னேலமளவியசிதரீ
ரீட்டுநவகும்பத்திலும். (௯)
சாத்துகசார்ந்துபனிநீர்பனிதங்குங்குமமுஞ்
சேர்த்தியுளத்தாதரவுசெய்து. (௰)
வில்வமும்வெண்கமலமாதிவிதவெண்மலரு
மல்கமுடிவைக்கமனுவால். (௧௧)
நீர்ப்பூக்கொடிப்பூவிவந்தமரத்தின்பூப்
பார்பபூவுஞ்சாத்தறிந்துபாங்கு. (௧௨)
பாயசநெய்சர்க்கரைபயின்றபாகவிதந்
தாப்பவன்முன்னேதொகுத்து. (௧௩)
இட்டப்படியருத்தியந்தணர்க்குமீசனுக்காட்
பட்டத்தலத்தார்க்கும்பரித்து. (௧௪)
அருந்துவித்தேயாதுலர்க்குமற்றையவர்க்கு
மருந்துகதாம்பின்னையனம். (௧௫)

Koviloor Digital Library

Koviloor Digital Library